2017 மார்ச் 31-ம் திகதி

**ஊடக அறிக்கை: இராணுவத்தை நிர்வகிக்க போர்க்குற்றம் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவரை நியமித்ததன் மூலம் இலங்கை அரசு ஐ நா விற்கு அளித்த வாக்குறுதியை மீறுகிறது.**

**ஜோகன்னஸ்பர்க்:** போர்க்குற்றம் இழைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை இலங்கை ராணுவத்தின் பிரதம நிர்வாக அலுவலராக நியமித்தமை யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்களாக நியாயம் பெறக் காத்திருக்கும் யுத்தத்தால் பாதிப்புற்ற ஆயிரக்கணக்கானோரின் கன்னத்தில் அறைந்ததற்கு ஒத்ததாக, உள்ளது.

அவர் உதவி (adjutant) ஜெனரல் பதவியை ஏற்று வியாழன் அன்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளார் என்று இலங்கை ராணுவம் அறிவித்துள்ளது.

*"ஜெனீவாவில் மனிதஉரிமை கவுன்சிலின் கூட்டத்தொடர் முடிவடைந்த சில நாட்களுக்குள்ளேயே இந்த நியமனம் செய்யப்படுவது ஒரு மூர்க்கத்தனமான செயலாகும். அவ்வாறுசெய்ததன் மூலம் பொறுப்புக்கூறல் என்ற விடயத்திற்கோ அல்லது பாதுகாப்புத்துறையின் மறுசீரமைப்பிற்கோ அரசின் போதிய ஆர்வமின்மையை யே கா ட்டு கின்றது " என ITJP யின் நிறைவேற்று பணிப்பாளர் யாஸ்மின் சூக்கா அம்மையார் கூறுகின்றார். "முன்னாள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவி பிள்ளை அவர்கள், இவர்தான் ஆகக்குறைந்தது சர்தேச குற்ற செயல்களுக்காவது பொறுப்பு கூற நேரும் என இயம்பியுள்ளார் " எனறு சூக்கா அம்மையார் மேலும் கூறுகிறார்.*

இலங்கை அரசாங்கம் ஜெனீவாவில் கூட்டு சேர்ந்து இருதடவைகள் முன்வைத்த தீர்மானங்களில் பாதுகாப்பு, அரசசே வைகளில் தொடர்புபட்ட அலுவலர்களை வடிகட்டுவது என உறுதியளித்துள்ளது .

*“இவ்வாறு செய்தமை யுத்தத்தால் பாதிப்புற்ற வர்களை அவமதிப்பது மாத்திரம் அன்றி, வடிகட்டும் வழிமுறை ஒன்றி னை பேணுவது என இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதியை மீறுவதன் மூலம் யுத்தத்தால் பாதிப்புற் றோ ரை மாத்திரமன்றி சர்வதேச சமூகத்தையும் அவமதித்துள்ளது." என சூக்கா அம்மையார் கூறுகின்றார். அவர் தொடர்ந்து இவ்வாறும் கூறுகின்றார் "யுத்தத்தின் போது குற்ற செயல்கள் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு உள்ளூரிலேயே கௌ ரவம் அளித்து செய ற் படும் இலங்கை, சமாதான படையில் பணிபுரிய என வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுபவர்களை முறையாக வடிகட்டும் என நம்பமுடியாததால் இலங்கையிலிருந்து சமாதான படையில் பணிபுரிவதற்கு என ஆட் சேர்த்துக் கொள்ளுவதை ஐநா இடைநிறுத்தவேண்டும்."*

***பின்னணி***

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு த்தத்தின் இறுதிக்கட்டத்தின் பொழுது கொடூர செயல்களை புரிந்ததாக குற்றம் சாட்டப்படும் 58 வது

பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா பணிபுரிந்துள்ளார் .

2009 ம் ஆண்டில் புதுமாத்தளன் வைத்திய சாலைமீது ஷெல் தாக்குதல் நடத்திய பிரிவு களில் 58ம் பிரிவும் ஒன்று என நம்புவதற்கு நியாயப் படுத்தக்கூடிய ஆதாரங்கள் உள்ளது என ஐநா வின் புலனாய்வுகளின் பொழுது கண்டறியப்பட்டுள்ளது. தற்காலிகமாக அமைக்கப் பட்டிருந்த இவ்வைத்தியசாலை அமைந்துள்ள இடம் பற்றிய விபரங்களை GPS இணைப்பு மூலம் ராணுவத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அது அமைந்திருந்த இடம் சிறுகடலின் (lagoon) மறுபுறத்திலிருந்து 58 வது பிரிவினரின் கண்ணுக்கு எட்டக்கூடிய தூரத்தில் இருந்தது. யுத்தின் பொழுது உயிர் தப்பியவர்களின் கூற்றுப்படி அவ்வைத்தியசாலை காயப்பட்ட சாதாரண குடிமக்களால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அப்படியிருந்தும் அவ்வைத்தியசாலை மீண்டும் மீண்டும் ராணுவத்தின் தாக்குதலுக்குள்ளாகியது . அப்படி இருக்கையில் அவ்வைத்தியசாலையில் LTTEயினர் பரிகாரம் பெற்றுக்கொண்டிருந்ததாகவும் சா தாரண குடி மக்கள் அங்கு இருக்கவில்லை எனவும் மேஜர் ஜெனரல் சில்வா உறுதியாக கூறியுள்ளார். அது எவ்வாறாயினும் யுத்தத்தில் காயமுற்ற போராளிகளை இலக்காக்குவது சர்வதேச மனிதாபிமான சட்டத்திற் கமைய ஒரு குற்றவியல் செயலாகும் (hors de combat ).

போரின்பின் உயிர் தப்பியவர்கள் கூற்றுப்படி சாதாரண குடிமக்களில் பெருமளவிலானோரிற்கு உயிரிழப்பு ஏற்பட்டதாக்க கூறப்பட்ட புதுமாத்தளணை மீளப்பெற தாக்குதலை ஏப்ரல் 2009இல் தாமே நடத் தியதாக மேஜர் ஜெனரல் சில்வா உறுதிப்பட கூறியுள்ளார் . அம்முயற் சி க்கு வேவு விமானங்களினால் எடுக்கப்பட்ட படங்களை தாம் பயன்படுத்தியதாக அவர் கூறியுள்ளார். அவ்வாறாயின் அப் பகுதியில் பெருமளவு சாதாரண குடிமக்கள் குழுமியிருந்தார்கள் என்பதையும் அவர் கண்டிருப்பார்.

2009 மே மாதம் 18ம் திகதி LTTE யின் ராணுவ, அரசியல், தலைவர்களும் , அவர்களின் குடும்பத்தினரும் சரணடைந்த பகுதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவின் கட்டளை க்கமைய செயற் பட்ட தென்பது ஐநாவின் கூற்று ஆகும். இவ்வாறு சரண்டைந்தோர் நூற்றுக்கணக்கில் எந்தவித விசாரணையும் இன்றி கொல்லப்பட்டோ காணாமல் போக செய்யப்பட்டோ உள்ளனர் என்பது ஐநாவின் கூற்று ஆகும். அவ்வமயம் ராணுவத்தினரிடம் சரணடைந்ததை கண்ணால் கண்டு பின்னர் காணாமல் போனவர்களின் பட்டியல் ஒன்றை ITJP தயாரித்துள்ளது.

இப்பட்டியலில் பெண்களும் சிறுவர்களும் அடங்குவர். தன கண்ணால் கண்டஒருவரின் கூற்றுப்படி அப்பிரதேசம் முழுவதும் சவீந்திர சில்வாவின் கட்டளைப்படி செயற் படும் பிரிவாக இருந்தது எனவும் அவரிடம் சென்று சரணடைந்த LTTE அரசியல் தலைவர்களின் கைகளை அவரே குலுக்கினார் என்றும் சிலமணித்தியாலங்களுக்கு பின்னர் அவர்களின் பிரேதங்கள் வீதியோரங்களில் கிடந்ததை தாம் கண்டதாகவும் கூறியுள்ளார். குறித்த தலைவர்கள் பாதுகாப்பாக சரணடையலாம் என அரசு உறுதியளித்திருந்தும் எந்தவித விசாரணையும்

இன்றி அத்தலைவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று ஐநா வின் புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. சவீந்திர சில்வாவினது 58 வது பிரிவு சித்திரவதை செய்வதிலும் தொடரபு பட்டு இருந்தது என ஐநா குற்றம் சாட்டியுள்ளது.

அவர் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தமையால் ஒரு உயர்மட்ட சமாதான படைப்பிரிவின் ஆலோசனை குழுவிலிருந்து 2012 ம் ஆண்டு நீக்கப்பட்டுள்ளார். பின்னர் தென்னாபிரிக்க நாடொன்றில் ராஜதந்திர பதவி ஒன்றி ற்கு நியமிக்க படுவதை அந்நாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அவருக்கெதிராக போர் குற்றங்களும் மனி தாபிமான மற்ற குற்றங்கள் புரிந்ததாகவும் பெருமளவு புகார்கள் உள்ளமையை தொகுத்து வழங்கியே குறித்த அரச சார்பற்ற ஸ்தாபனம் அவருக்கெதிராக செயற் பட்டு குறித்த ராஜதந்திரப்பதவிக்கு அவர் தகுதியற்றவர் எனக்காட்டி அந்த தென் ஆப்ரிக்கா நாடு அவரின் நியமனத் தை ஏற்க மறுக்க செய்தது.